**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர்**

**மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு**

ROC.No.814/2020/RG/F1, P.Dis. No.36/2021 Dated 07.04.2021

**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 64/2022**

**வழக்கின் சுருக்கம்**

<table>
<tr><td>1.</td><td>எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த காலம்</td><td>:</td><td>எதிரி 24/03/2020 ம் தேதி காவலுக்குட்படுத்தப்பட்டு, அன்றைய தினமே பிணையில் சென்றுள்ளார்.</td></tr>
<tr><td>2.</td><td>இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td>:</td><td>05/08/2022</td></tr>
<tr><td>3.</td><td>குற்றம் குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>:</td><td>09/10/2023</td></tr>
<tr><td>4.</td><td>தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம்</td><td>:</td><td>1. எதிரி மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் பிரிவு 359BNSS-ன் படி CMP.No.88/2026 ல் தாக்கல் செய்யப்பட்ட சமாதான மனு 18/03/2026 ம் தேதி தள்ளுபடி. செய்யப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>5.</td><td>அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>:</td><td><table>
<tr><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1 - 18/03/2026</td><td>இல்லை</td></tr>
<tr><td>அ.சா.2 18/03/2026</td><td>இல்லை</td></tr>
<tr><td>அ.சா.3 25/03/2026</td><td>25/03/2026</td></tr>
</table></td></tr>
<tr><td>6.</td><td>கு.வி.மு.ச பிரிவு 313(1)ஆ குவிமுச கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>:</td><td>25/03/2026</td></tr>
<tr><td>7.</td><td>எதிரிகள் தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டநாள்:</td><td></td><td>இல்லை</td></tr>
</table>

RANGESWARI
Digitally signed by RANGESWARI
Date: 2026.03.28 17:30:43 +0530

| | | | |
|---|---|---|---|
| 8. | தலைமறைவு எதிரிகள் பற்றிய விவரம் | : | இல்லை |
| 9. | மேல்முறையீட்டுநீதிமன்றத்தால்பிறப்பிக்க பட்டஇடைக்காலதடை உத்தரவு பற்றிய விவரங்கள் | : | இல்லை |

RANGESWARI

Digitally signed by RANGESWARI
Date: 2026.03.28 17:30:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

திருவிடைமருதூர்.(மு.கூ.பொ.)

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர்**

முன்னிலை : **திருமதி. P. ரெங்கேஸ்வரி B.Sc., L.L.M.,**

நீதித்துறை நடுவர் எண்.I. கும்பகோணம். மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர் (மு.கூ.பொ),

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாள் சனிக்கிழமை**

திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் பங்குனி-14 ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 64/2022**

**(CNR.No. TNTJ 270004362022)**

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சிசி.எண்.64/2022 |
| 2 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | திருவிடைமருதூர் காவல் நிலையம் குற்றஎண். 79/2020 |
| 3 | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர் திருவிடைமருதூர் காவல் நிலையம் |
| 4 | எதிரிகளின் விபரம்<br>பெயர்<br>வயது<br>தந்தையின் பெயர்<br>குடியிருப்பு | அபிராமி, வயது 33/2020,<br>க/பெ. மணிவண்ணன்,<br>மகாதானவீதி, திருவிடைமருதூர். |
| 5 | தேதி நாள்<br>சம்பவம் | 23/03/2020 |
| 6 | முறையீடு | 24/03/2020 |
| 7 | கைது | 24/03/2020 |
| 8 | பிணையில் விடுவித்தல் | 24/03/2020 |
| 9 | விசாரணை துவக்கம் | 18/03/2026 |
| 10 | விசாரணை முடிவு | 25/03/2026 |
| 11 | தண்டனை அல்லது உத்தரவு | முடிவாக, இவ்வழக்கில் எதிரி பிரிவுகள் 294(பி), 324 இதசவின் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து |

RANGESWARI

Digitally signed by RANGESWARI
Date: 2026.03.28 17:30:56 +0530

| | | |
|---|---|---|
| | | எதிரியை கு.வி.மு.சபிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 12 | தீர்ப்புரை நகலை வழங்குவது அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் மீதான காண் முடிவு | -- |
| 13 | கால தாமததிற்கான விளக்கம் | அரசுத்தரப்பு சாட்சிகளை விசாரிக்க காலதாமதம் |

இவ்வழக்கானது 06/08/2022 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 25/03/2026 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-I **திரு.I.பாண்டியராஜன்**,B.SC.,B.L.,MBA., அவர்களும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.N.செல்வகுமாா**,B.A.,B.L., அவர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

**2. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்**:-

கடந்த 23/03/2020ம் தேதி இரவு 08.00 மணியளவில் திருவிடைமருதூர் மகாதான வீதியில் வாடகை வீட்டில் வசிக்கும் பட்டியல் சாட்சி-1 வனிதா என்பவரை அதே வீட்டில் வாடகைக்கு குடியிருந்து வரும் இவ்வழக்கின் எதிரியின் கணவர் தொலைபேசியில் பட்டியல் சாட்சி-1ன் கணவர் முத்துக்குமார் எதிரி அபிராமியை வைத்திருப்பதாக எதிரியின் கணவரிடம் பட்டியல் சாட்சி-1ன் கணவர் சொன்னதாக சொல்லி, எதிரி பட்டியல் சாட்சி-1ஐ "குச்சிகாரி தேவடியா", என காமகுரோதமான வார்த்தைகளால் திட்டியும், இரும்பு கம்பியால்

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.28 17:31:02 +0530

கையில் அடித்தும் குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி மீது பிரிவுகள் 294(பி), 324 இதசவின் கீழ் திருவிடைமருதூர் காவல் உதவி ஆய்வாளர் ஒரு குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 230-ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

**4. குற்றச்சாட்டு:-**

அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள முகாந்திரங்கள் எதிரி குற்றம் புரிந்திருப்பார்கள் என கருதவும், கருத்தில் கொண்டு செயலாற்றவும் வழிவகுப்பனவாக தெரிந்தமையால், எதிரி மீது பிரிவுகள் 294(பி), 324 இதசவின் கீழ் குற்றச்சாட்டு வனைந்து எதிரிக்கு படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி இல்லை என்று கூறினார். எனவே வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

5. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் 1 முதல் 8 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6. வழக்கு விசாரணைக்கு முன் எதிரி மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் பிரிவு

RANGESWARI Digitally signed by RANGESWARI
Date: 2026.03.28 17:31:08 +0530

359BNSS-ன் படி CMP.No.88/2026 ல் சமரச மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்திய தண்டனை சட்டப்பிரிவு 294(b)-ன் படியான குற்றம் சமரசம் செய்து கொள்ள முடியாத குற்றம் என்பதால் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டு வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**7. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

வழக்கு சம்பவம் குறித்து கடந்த 24/03/2020 ம் தேதி காலை 11.00 மணிக்கு அ.சா.1 வனிதா என்பவர் அ.சா.3 காவல் உதவி ஆய்வாளர் கணேசன் என்பவரிடம் புகார் மனு கொடுத்துள்ளார். மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.79/2020-ல் சட்டப்பிரிவுகள் 294(பி), 324 வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.2 கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். பின்பு வழக்கை புலன் விசாரணைக்கு பட்டியல் சாட்சி-8 உதவி ஆய்வாளர் கபீர்தாசன் பார்வைக்கு வைத்துள்ளார். உதவி ஆய்வாளர் வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 24/03/2020 ம் தேதி மதியம் 01.00 மணிக்கு சம்பவ இடம் சென்று பட்டியல் சாட்சி-4 ஐயப்பன், மற்றும் பட்டியல் சாட்சி-5 ராஜா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.3 பார்வைமகசர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார். வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.2 முத்துக்குமார் விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும், புலன் விசாரணையிலிருந்தும், வழக்கு சம்பவம் உண்மை என்பது தெரிய வந்ததால் எதிரியை கைது செய்ய தேடியபோது எதிரி 24/03/2020 ம் தேதி காலை 11.00 மணிக்கு திருவிடைமருதூர் காவல்நிலையத்திற்கு விசாரணைக்கு வந்தவரை தக்க காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் ஜாமீனில் பிணையில் விடுவித்துள்ளார். பின்பு காயம்பட்ட அ.சா.1க்கு சிகிச்சை அளித்த பட்டியல்

RANGESWARI
Digitally signed by RANGESWARI
Date: 2026.03.28 17:31:14 +0530

சாட்சி-6 மருத்துவர் சித்தார்த் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்று வந்துள்ளார். மேற்படி மருத்துவர் காயம்பட்ட அ.சா.1 சிகிச்சையிலிருந்து தானாக சென்றுவிட்டபடியால் காயத்தின் தன்மை குறித்து சான்று வழங்க இயலாது என கருத்துரை வழங்கியுள்ளார். அவர் வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இறுதியாக புலன் விசாரணை முடித்து 24/09/2020 ம் தேதி எதிரி மீது பிரிவுகள் 294(பி), 324 இதசவின் படி 17.12.2024 அன்று குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

8. இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

9. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றார் எதிரி தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

**10. விவாதம்:-**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் குற்றச்சாட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரி மீதான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**11. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:-**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரி மீது அரசுத்தரப்பில்

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.28 17:31:21 +0530

சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் எந்த விதமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

**தீர்வு**

12. இருதரப்பும் கேட்கப்பட்டது. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

13. அரசு தரப்பில் கடந்த 23/03/2020 ம் தேதி இரவு 08.00 மணியளவில் திருவிடைமருதூர் மகாதான வீதியில் வாடகை வீட்டில் வசிக்கும் அ.சா.1 வனிதா என்பவரை அதே வீட்டில் வாடகைக்கு குடியிருந்து வரும் இவ்வழக்கின் எதிரியின் கணவர் தொலை பேசியில் அ.சா.1 ன் கணவர் முத்துக்குமார் எதிரி அபிராமியை வைத்திருப்பதாக எதிரியின் கணவரிடம் அ.சா.1 ன் கணவர் சொன்னதாக சொல்லி, எதிரி அ.சா.1 ஐ காமகுரோதமான வார்த்தைகளால் திட்டியதாகவும், இரும்பு கம்பியால் கையில் அடித்ததாகவும் எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

14. வழக்கு சம்பவம் குறித்து கடந்த 24/03/2020 ம் தேதி காலை 11.00 மணிக்கு அ.சா.1 வனிதா என்பவர் அ.சா.3 காவல் உதவி ஆய்வாளர் கணேசன் என்பவரிடம் புகார் மனு கொடுத்துள்ளார். மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.79/2020-ல் சட்டப்பிரிவுகள் 294(பி), 324 வழக்கு பதிவு செய்து கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். மேற்படி கணினி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

15. வழக்கு சம்பவம் குறித்து புகார் மனு அளித்துள்ள வனிதா அ.சா.1 ஆக

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.28 17:31:26 +0530

விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர் என்றும், சுமார் 06 ஆண்டுகளுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகம் இல்லை என்றும், 2020-ம் அன்று இரவு 08.30 மணியளவில் தான் தனது வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தபோது யாரோ தன்னை சத்தம் போட்டுக்கொண்டே பின்னால் இருந்து தள்ளிவிட்டார்கள் என்றும், அதில் தான் கீழே விழுந்துவிட்டதாகவும், தன்னை பின்னால் இருந்து தள்ளியதாலும், தான் எழுந்து திரும்பி பார்ப்பதற்குள் ஓடிவிட்டதால் யார் தள்ளினார்கள் எதற்கு தள்ளினார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், அது சம்பந்தமாக திருவிடைமருதூர் காவல் நிலையம் சென்றதாகவும், அங்கு போலிசாரிடம் அது சம்மந்மாக நடந்த விவரம் பற்றி கூறியதாகவும், அவர்கள் எதோ எழுதினார்கள் என்ன எழுதினார்கள் என்று தெரியாது என்றும், தன்னிடம் படித்து காண்பிக்கவில்லை கையொப்பம் எதுவும் தன்னிடம் வாங்கினார்களா என்று தனக்கு ஞாபகம் இல்லை என்றும் இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், புலன் விசாரணை அதிகாரியிடம் குவிமுச பிரிவு 161ன் படி அளித்த வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால், அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். குறுக்கு விசாரணையிலும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

16. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.2 முத்துக்குமார் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், அ.சா.1 தனது மனைவி என்றும், சுமார் 06 ஆண்டுகளுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகம் இல்லை என்றும், 2020-ம் அன்று இரவு 08.30 மணியளவில் தன் மனைவி தங்கள் வீட்டு வாசலில்

RANGESWARI
Digitally signed by RANGESWARI
Date: 2026.03.28 17:31:32 +0530

முன்பு நின்று கொண்டிருந்தபோது யாரோ அவரை சத்தம் போட்டுக்கொண்டே பின்னால் இருந்து தள்ளிவிட்டார்கள் என்றும், அதில் அவர் கீழே விழுந்துவிட்டதாகவும், அவரை பின்னால் இருந்து தள்ளியதாலும், அவர் எழுந்து திரும்பி பார்ப்பதற்குள் ஓடிவிட்டதாலும் யார் தள்ளினார்கள் எதற்கு தள்ளினார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், போன் மூலம் கடையில் இருந்த தன்னிடம் கூறினார் என்றும், கீழே விழுந்ததில் தன் மனைவிக்கு ஏற்பட்ட காயத்திற்காக கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்ததாகவும், மற்ற விவரங்கள் எதுவும் தெரியாது என்றும், தான் வேறு எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை, கேள்வி படவும் இல்லை என்றும், அ.சா.1 தன் மனைவி ஆஜர் எதிரி மீது கொடுத்த புகார் சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், புலன் விசாரணை அதிகாரியிடம் குவிமுச பிரிவு 161ன் படி அளித்த வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால், அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். குறுக்கு விசாரணையிலும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

17. வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் அ.சா.1 புகார்தாரர் வனிதா என்பவர் விசாரணையின் போது அரசுத்தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்காமல், பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ள நிலையில், ஆவணங்களை பரிசீலனை செய்ததில், அ.சா.1ம், எதிரியும் சமாதானம் செய்து கொண்டு, அ.சா.1 இந்நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்யப்பட்டு, அது இந்த நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. எனவே அ.சா.1 ன் மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் அ.சா.1 அரசுத்தரப்பு வழக்கினை

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.28 17:31:39 +0530

அனுசரித்து சாட்சியம் அளிக்காத நிலையில், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தினை மட்டுமே வைத்து எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டதாக கருத முடியாது. எனவே இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**18. முடிவாக, இவ்வழக்கில் எதிரி பிரிவுகள் 294(பி), 324 இதசவின் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை கு.வி.மு.சபிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

19. வழக்கு சொத்துக்கள் ஏதும் இல்லை. எதிரி எழுதிக்கொடுத்துள்ள பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 28/03/2026-ம் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RANGESWARI

Digitally signed by RANGESWARI
Date: 2026.03.28 17:31:46 +0530

மாவட்டஉரிமையியல்மற்றும்நீதித்துறைநடுவர்,

திருவிடைமருதூர்.(மு.கூ.பொ.)

**அரசுத்தரப்பு சாட்சிகள்;**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி. வனிதா (புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு. முத்துக்குமார் (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.3 | திரு. கணேசன் (காவல் உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்;**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 24/03/2020 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 24/03/2020 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 24/03/2020 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.4 | 24/03/2020 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 24/03/2020 | காயச்சான்று |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்;** இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்;** இல்லை

**குறிப்பு;**

1. எதிரி 24/03/2020 ம் தேதி காவலுக்குட்படுத்தப்பட்டு, அன்றைய தினமே பிணையில் சென்றுள்ளார்.

2. சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. இவ்வழக்கின் தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை.

5. வழக்கின் தீர்ப்பு நகல் மாண்பமை தலைமை நீதித்துறை நடுவர் தஞ்சாவூர் (இருப்பு) கும்பகோணம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

RANGESWARI

Digitally signed by RANGESWARI
Date: 2026.03.28 17:31:56 +0530

மாவட்டஉரிமையியல்மற்றும்நீதித்துறைநடுவர்,

திருவிடைமருதூர். (மு.கூ.பொ.)